பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

*26 09 2025 FRIDAY 7.15 PM*

ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மழை – வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஹிமாச்சலபிரதேசம், பஞ்சாப், உத்தராகண்ட் விவசாயிகளுக்கு, பிரதமரின் வருவாய் ஆதரவு நிதியுதவித் திட்டத்தின் 21-வது தவணைத் தொகையை மத்திய அரசு விடுவித்துள்ளது.

2. மேற்குவங்க மாநிலத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முன்வருமாறு அம்மாநில மக்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அழைப்பு விடுத்துள்ளார்.

3. நேட்டோ உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் பொறுப்புணர்வுடன் சரியான தகவல்களை வெளியிட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

4. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் காரணமாக பண்டிகை கால விற்பனை 25 சதவீதம் அதிகரித்துள்ளது.

5. மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசிய பசிபிக் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<

மழை – வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஹிமாச்சலபிரதேசம், பஞ்சாப் மற்றும் உத்தராகண்ட் மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு, பிரதமரின் வருவாய் ஆதரவு நிதியுதவித் திட்டத்தின் 21-வது தவணைத் தொகையை, மத்திய அரசு விடுவித்துள்ளது.

காணொலி வாயிலாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ் சிங் சௌஹான் இந்த தொகையை விடுவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், மூன்று மாநிலங்களையும் சேர்ந்த 27 லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகளின் வங்கிக் கணக்கில் சுமார் 540 கோடி ரூபாய் நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்த நிதியுதவியைப் பெறுபவர்களில் 2 லட்சத்து 70 ஆயிரம் பேர் பெண் விவசாயிகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தொகை, இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைக்க உதவிகரமாக இருக்கும் என்றும் திரு.சிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மேற்குவங்க மாநிலத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முன்வருமாறு அம்மாநில மக்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அழைப்பு விடுத்துள்ளார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற துர்கா பூஜையில் கலந்துகொண்டு பேசிய அவர், இம்மாநிலத்தை பாதுகாப்பான, அமைதியான மற்றும் வளமானதாக மாற்ற பாடுபடுமாறு கேட்டுக்கொண்டார்.

முன்னதாக, சமூக சீர்திருத்தவாதி பண்டிட் ஈஸ்வர் சந்திர வித்யாசாகரின் பிறந்தநாளையொட்டி, அவருக்கு திரு அமித் ஷா மரியாதை செலுத்தினார்.

பின்னர் அங்குள்ள காளி கோவிலில் வழிபாடு செய்த அவர், கிழக்கு மண்டல கலாச்சார மையத்தில் நடைபெறும் துர்கா பூஜை கொண்டாட்டங்களையும் தொடங்கிவைத்தார்.

>>>>>><<<<<<

பீகாரில் தொடங்கப்பட்டுள்ள முதலமைச்சரின் மகளிர் வேலைவாய்ப்புத் திட்டம், மகளிரின் வாழ்வாதாரத்திற்கு பேருதவியாக அமையும் என்று, மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு.சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவியைப் பயன்படுத்தி, மகளிர் தங்களது எதிர்காலத்திற்கான தொழில்களைத் தொடங்கி, தொழில்முனைவோராக மாறுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார். மேலும், மகளிர் சுய-சார்பு அடைவதற்கும் இது வழிவகை செய்யும் என்று திரு.சிராக் பாஸ்வான் குறிப்பிட்டார்.

*>>>>>><<<<<<*

*நேட்டோ உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் பொறுப்புணர்வுடனும், துல்லியமான தகவல்களுடனும் பொதுவான அறிக்கைகளை வெளியிட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.*

*புதுதில்லியில் இன்று செய்தியாளர்களை சந்தித்த வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெஷ்ய்வால், பிரதமர் திரு நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் திரு புட்டினுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாக நேட்டோ அமைப்பின் தலைமைச் செயலாளர் திருமதி மார்க் ரூட் கூறியிருப்பது முற்றிலும் தவறானது என்றார்.*

*ரஷ்ய ராணுவத்தில் பணியாற்றுவது உயிருக்கும், உடமைக்கும் ஆபத்து என்பதை உணர்ந்து, இந்தியர்கள் விழிப்புடன் இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.*

*அமெரிக்காவில், சட்டவிரோதமாக குடியேறியவர்களில், இந்த ஆண்டு ஜனவரி 20-ஆம் தேதிமுதல், செப்டம்பர் 25-ஆம் தேதிவரை 2 ஆயிரத்து 417 இந்தியர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் திரு ரன்தீர் ஜெஷ்ய்வால் குறிப்பிட்டார்.*

*அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையே நட்புறவு நீடித்து வருவதாக தெரிவித்த அவர், H1-B விசா குறித்த புதிய நடைமுறைகள் செயல்பாட்டுக்கு வந்துள்ள போதிலும், திறமை வாய்ந்த இளைஞர்கள், உரிய அனுமதியுடன் அமெரிக்காவில் பணிபுரிவதற்கு தடை இல்லை என்றும் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*உத்தரப்பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் நடைபெறும் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் சுமார் 4 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வர்த்தகம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.*

*பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று தொடங்கிவைத்த இம்மாநாடு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய உத்தரப்பிரதேசத்தின் சிறு-குறு நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு ராகேஷ் சச்சான், இம்மாநிலத்தை சேர்ந்த சுமார் 2 ஆயிரத்து 400 சிறுதொழில் நிறுவனங்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை காட்சிக்கு வைத்திருப்பதாக கூறினார்.*

*குறிப்பாக, ஐவுளி, கைவினைப் பொருட்கள், கதர் ஆடைகள், ஆயத்த ஆடைகள், தோல் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் கண்காட்சியில் இடம்பெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*இதுதவிர, மின்னணு சாதனங்கள், பாதுகாப்பு தளவாடங்கள், மருத்துவம் மற்றும் மருந்துப்பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்களும் கண்காட்சியில் பங்கேற்றிருப்பதாக அவர் கூறினார்.*

*இதன்மூலம், கைவினைஞர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை வெளிநாட்டு நிறுவனங்களிடம் நேரடியாக விற்பனை செய்யும் வாய்ப்பு கிடைத்திருப்பதாகவும் திரு ராகேஷ் சச்சான் தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் காரணமாக நவராத்திரி பண்டிகை தொடங்கிய இரண்டு நாட்களிலேயே சுமார் 25 சதவீதம் அளவிற்கு விற்பனை அதிகரித்துள்ளது.*

*இதுதொடர்பாக, REDSEER நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், இந்த சீர்திருத்தத்தால் பல்வேறு பொருட்களின் மீதான வரி குறைக்கப்பட்டதையடுத்து, அவற்றின் விலையும் குறைந்திருப்பதால் பண்டிகைகால விற்பனை இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*குறிப்பாக, தொலைக்காட்சி பெட்டிகள் மீதான வரி குறைக்கப்பட்டுள்ளதால், அவற்றின் விற்பனை அதிகரித்துள்ளது*

*மரச்சாமான்கள் மற்றும் 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் குறைவான விலையுள்ள அழகுசாதன பொருட்கள் விற்பனையும் அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.*

*மின்னணு வணிகத் தளங்களிலும் முதல் இரண்டு நாட்களிலேயே 38 கோடி வாடிக்கையாளர்கள் பொருட்களை வாங்கியிருப்பதாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*தேசிய கொடி குறித்த வினாடி – வினா போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள், உலகின் மிக உயரமான போர்க்களமான சியாச்சின் பனிச்சிகரத்திற்கு அழைத்து செல்லப்பட உள்ளனர்.*

*இதுகுறித்து மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சுதந்திர தினத்தையொட்டி மை பாரத் அமைப்பின் மூலம் நடத்தப்பட்ட வினாடி – வினா போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பேர், சியாச்சின் அழைத்துச்செல்லப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

இவர்கள் அங்கு பணியாற்றும் ராணுவ வீரர்களுடன் மூன்று நாட்கள் தங்கியிருந்து, ராணுவ வீரர்களின் செயல்பாடு, தலைமைப்பண்பு போன்றவற்றை அறிந்துகொள்ளும் வாய்ப்பை பெறுவார்கள் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், ராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடும் வாய்ப்பும் இவர்களுக்கு கிடைக்கும்.

அதேபோன்று, ராணுவ அதிகாரிகளும் சியாச்சின் பனிமலை பகுதியில் புவியியல் சூழல், சுற்றுச்சூழல் சவால் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து எடுத்துரைக்க இருப்பதாகவும் மத்திய இளைஞர் நலத்துறை தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

சத்திஷ்கடில் தனியார் எஃகு தொழிற்சாலையில் கட்டிடம் இடிந்து விபத்துக்குள்ளானதில் *6* பேர் உயிரிழந்தனர்.

ராய்ப்பூர் அருகே *Siltara* பகுதியில் இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சம்பவ இடத்திற்கு காவல்துறையினர் விரைந்துள்ளதாகவும், மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>><<<<<<

பாலஸ்தீன மேற்கு கரைப்பகுதியை இஸ்ரேல் கைப்பற்றுவதை அமெரிக்கா அனுமதிக்காது என்று அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

ஐ நா பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்ற பல்வேறு நாடுகளும் பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பதாக அறிவித்தது பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர், இந்த அங்கீகாரத்தால் இஸ்ரேலின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முடியாது என்று குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசிய பசிபிக் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், *Chanvi Sharma* தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் *Chanvi Sharma – Sujita Sukumaran* இணை வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் *Ankit Dalal-ம்,* இரட்டையர் பிரிவில் *Ankit Dalal - Amal Biju* இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு *8* மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

எகிப்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், *7-6*, *7-6* என்ற செட்கணக்கில் எகிப்தின் *Michael Bassen Sobhy-*யை வென்றார்.

>>>>>><<<<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா *167* ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பிரிஸ்பனில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட *50* ஓவரில் *9* விக்கெட் இழப்புக்கு *280* ரன் எடுத்தது.

அதிகபட்சமாக *Vedant Trivedi 86* ரன் எடுத்தார்.

*281* ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த ஆஸ்திரேலியா *28* புள்ளி *3* ஓவரில் *113* ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

*Khilan Patel* அபாரமாக பந்துவீசி *4* விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை அனைத்து ஆட்டங்களிலும் வெற்றி பெற்று, இந்தியா கைப்பற்றியுள்ளது.

>>>>>><<<<<<

***உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.***

***>>>>>><<<<<<***

***உலக பாரா வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Shetel Devi - Sarita இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.***

***>>>>>><<<<<<***